
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 107 | 4 Pages | 15.11.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 107 | 4 பக்கங்கள் | 15.11.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இன்னா எனத்தா னுணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கட் செயல்**

**விளக்கம்:**
ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவைகளை மற்றவனிடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.

## முன்பை விட நலமாக உள்ளேன் சுனிதா வில்லியம்ஸ் தகவல்



வாஷிங்டன், நவ.15

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து, ஸ்டார்லைனர் விண்கலத்தில், ஜூன் 6ல்சர்வதேசவிண்வெளி நிலையத்துக்கு சென்ற விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் பூமிக்கு திரும்ப முடியாமல் சிக்கியுள்ளனர்.

அவர்களைஏற்றிச்சென்றபோயிங்ஸ்டார்லைனர்விண்கலம்தொழில்நுட்பகோளாறு காரணமாக இருவரையும் விட்டுவிட்டு, சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து பூமிக்கு வந்தடைந்தது. அவர்களை பூமிக்கு பத்திரமாக மீட்டு வர பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இதனிடையே விண்வெளி நிலையத்தில் இருந்து சுனிதா வில்லியம்ஸ் ஜனாதிபதி தேர்தலில் விண்வெளியில் இருந்தபடியே வாக்களித்தார்.

இதற்கிடையே, சர்வதேச விண்வெளி நிலையத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் சமீபத்தில் வெளியாகின. இவற்றில், சுனிதாவின் உடல் மெலிந்து காணப்பட்டதால், அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டதாக கூறப்பட்டது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தபடி சுனிதா வில்லியம்ஸ் சமீபத்தில் பேட்டி அளித்தார். அப்போது, உடல்நிலை குறித்து அவர் கூறியதாவது:

நான் அதே உடல் எடையுடன்தான் இங்கு உள்ளேன். என் உடல்நிலை சீராக உள்ளது. எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.சர்வதேச விண்வெளி நிலையத்தில் மைக்ரோ கிராவிட்டி உள்ளதால், உடலில் ஏற்படும் வழக்கமான மாற்றங்கள்காரணமாகஎடைகுறைந்ததுபோல்தெரிகிறது.என்உடல்நிலையை தற்காத்துக்கொள்ள, தினமும் உடற்பயிற்சி செய்கிறேன். பளு தூக்குதல் போன்ற உடற்பயிற்சிகள் என்னை வலிமையாக்கி உள்ளன. முன்பை விட தற்போது நலமாக உள்ளேன். எனது உடல்நிலையில் எந்தவிதமாற்றம் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## நுண்ணுயிர்கள் அழிவு, அனைத்து உயிர்களுக்குமான மரண எச்சரிக்கை சத்குரு பேச்சு



பகு, நவ.15

ஐ.நா., சபை சார்பில், சி.ஓ.பி., 29 எனப்படும் பருவநிலை உச்சி மாநாடு, அசர்பைஜான் நாட்டில், கடந்த 11ம் தேதி துவங்கியது. இதில் உலக நாடுகளின் பல்வேறு தலைவர்களும் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டில், ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு பங்கேற்று பேசியதாவது:

உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. இந்த பூமியின் ஆரோக்கியம் என்பது மனிதர்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல. அனைத்து உயிரினங்களும் உயிர்ப்போடு இருப்பதில்தான் இருக்கிறது. நுண்ணுயிர், பூச்சி, புழு மற்ற அனைத்து சிறிய உயிர்களும் வலிமையாக வாழவில்லை என்றால், நாம் வலிமையாக வாழ முடியாது. பூமியில் உள்ள உயிரினங்களில் 60% மேலாக மண்ணுக்கு அடியில் உள்ளன. மேலும் 95% சதவிகித உயிர்கள் மண் மேல் செழித்து வளர்கின்றன. நீண்ட காலமாக நிலம், பசுமை போர்வையின்றிதரிசாகவிடப்படுவதால்,அதிகமானஉயிரினங்கள்,குறிப்பாக நுண்ணுயிர்கள்அழிந்துபோகின்றன.இந்தப்போக்கு,பூமியைஅழித்துவிடும். நம்அனைவருக்கும்அடித்தளமாகஇருக்கும்நுண்ணுயிர்கள்எல்லாம்அழிந்து வருகின்றன. இது, மனிதர்களுக்கு மட்டுமல்ல, இந்த பூமியில் இருக்கும் அனைத்து உயிர்களுக்குமான மரண எச்சரிக்கை. மண் அழிவு என்பது மிகத் தீவிரமான பிரச்சினை. ஆனால், இதை பற்றி யாரும் பேசுவதில்லை. சரியான மாற்று வழிகள் உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

அழிந்து வரும் மண் வளத்தினை மேம்படுத்துவதற்காக மண் காப்போம் என்ற உலகளாவிய இயக்கத்தை சத்குரு 2022ஆம் ஆண்டு துவக்கினார். உலகளவில் இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பல்வேறு நாட்டு அரசாங்கங்களை செயல்பட வலியுறுத்தியும் 30,000 கி.மீ பயணம் மேற்கொண்டார். இவ்வியக்கத்தின் மூலம் பல்வேறு நாடுகளுக்கு அந்தந்த நாடுகளின் மண் வளத்தை மேம்படுத்துவதற்கான பிரத்யேக பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

## பராமரிப்பு இல்லங்களில் 70 ஆண்டுகளாக நேர்ந்த கொடுமை; பகிரங்க மன்னிப்பு கோரிய நியூசிலாந்து அரசு

வெல்லிங்டன், நவ.15

நியுசிலாந்தில் கடந்த 1950ம் ஆண்டு முதல் அரசு கட்டுப்பாட்டில் இயங்கி வந்த பராமரிப்பு இல்லங்களில், சுமார் 70 ஆண்டுகளுக்கும் மேலாக ஏராளமான சிறுவர்களும், பெண்களும் கொடூர சித்ரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. குறிப்பாக பாலியல் துன்புறுத்தல், கருத்தடை, மின்சாரம் பாய்ச்சுதல் உள்ளிட்ட பல கொடுமைகள் நிகழ்ந்ததாகவும், 1970களில் இந்ததுன்புறுத்தல்கள் உச்சத்தை எட்டியதாகவும் கூறப்படுகிறது. இந்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக அரசு தரப்பில் விசாரணை குழு அமைக்கப்பட்டது. மொத்தம் 53 லட்சம் மக்கள்தொகையை கொண்ட நியூசிலாந்து நாட்டில், பராமரிப்பு இல்லங்களில் துன்புறுத்தல்களை அனுபவித்து உயிர்பிழைத்தாக கூறப்படும் சுமார் 2,300 பேரிடம் விசாரணை குழுவினர் நேரடியாக விசாரணை நடத்தினர்.

மேலும் அந்த அறிக்கையில், கடந்த 1950ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை அரசு பராமரிப்பு இல்லங்களில் சுமார் 2 லட்சத்திற்கும் அதிகமான பெண்களும், குழந்தைகளும் துன்புறுத்தப்பட்டுள்ளனர் என்றும், அரசு இல்லங்களில் நிகழ்ந்த கொடூரங்களுக்கு நியூசிலாந்து அரசும், மத தலைவர்களும் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

நியூசிலாந்தின் தற்போதைய அரசு மற்றும் முந்தைய அரசுகளின் சார்பில் பகிரங்க மன்னிப்பு கோருவதாக அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் தெரிவித்துள்ளார். மேலும் விசாரணை குழு அளித்த 28 பரிந்துரைகளை நியூசிலாந்து அரசு நிறைவேற்றி உள்ளதாக குறிப்பிட்ட அவர், அடுத்த ஆண்டு முதல் நவம்பர் 12ந்தேதி தேசிய நினைவு தினமாக கடைபிடிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் குழந்தைகள் தின வாழ்த்து

சென்னை, நவ.15

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள குழந்தைகள் தின வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது,

மழலை மாறாத சிரிப்புடன் கற்பிதங்கள் இல்லா உள்ளத்துடன் உலகையும் சக மனிதர்களையும் எதிர்கொள்ளும் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக நம்மை வடிவமைத்துக் கொள்வது ஒவ்வொரு பொறுப்புள்ள மனிதரின் கடமை.

நமது கனவுகளைக் குழந்தைகள் மேல் ஏற்றாமல், அவர்களது கனவுகள் ஈடேறத் துணை நிற்போம். வளமான நலமான பசுமையான உலகில் குழந்தைகளை வளர்ப்போம் என்ற உறுதியை குழந்தைகள் தின வாழ்த்தாகத் தெரிவிப்போம் நமது உலகையும் வாழ்வையும் ஒளிபெறச் செய்யும் குழந்தைகளுக்கு எனது அன்பும் வாழ்த்துகளும். என தெரிவித்துள்ளார்.


# சிதம்பரம் நடராஜர் கோவில்: புதிய கொடி மரம் மட்டுமே அமைக்கப்படும்; அறநிலையத்துறை தகவல்

சென்னை, நவ.15

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உலக புகழ்பெற்ற நடராஜர் கோவில் உள்ளது. இக்கோவில் வளாகத்தில் தில்லை கோவிந்தராஜ பெருமாள் சன்னதி அமைந்துள்ளது. இங்கு நடராஜருக்கு மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனம், ஆனி மாதம் ஆனிதிருமஞ்சனம் தரிசன திருவிழாக்கள் நடைபெற்று வருகிறது. தில்லை கோவிந்தராஜ பெருமாளுக்கு பிரமோற்சவம் நடத்த வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த சூழலில் தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோவிலில் உள்ள கொடிமரம் பல ஆண்டுகளாக வெயில், மழையால் சேதமடைந்து இருப்பதால், அதற்கு பதிலாக புதிய கொடிமரம் வைக்க வேண்டும் என்று கோவில் நிர்வாக அறங்காவலர் சுதர்சன் மற்றும் பட்டாச்சாரியார்கள் முடிவு செய்தனர். இதற்காக நேற்று கொடி மரத்திற்கு படையல் செய்து வழிபட்டனர்.

இதுபற்றி அறிந்ததும் நடராஜர் கோவில் தீட்சிதர்கள் ஒன்று திரண்டு, தில்லை கோவிந்தராஜ பெருமாள் கோவில் நிர்வாகிகளிடம் இக்கோவிலில் பிரமோற்சவம் நடத்துவது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது. இதனால் இங்குள்ள கொடி மரத்தை புதுப்பிக்கவோ, மாற்றவோ கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.



இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியது. இந்நிலையில், சிதம்பரம் நடராஜர் கோவில் வளாகத்தில் உள்ள தில்லை கோவிந்தராஜ பெருமாள் சன்னிதானத்தில் புதிய கொடிமரம் நடுவதற்கு தடை விதித்து சிதம்பரம் சார்பு நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன் உத்தரவிட்டார். மேலும் 15 நாட்களுக்கு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் தடை விதித்து உத்தரவிட்டிருந்தார். நீதிபதியின் உத்தரவை ஏற்று கொடிமரம் நடும் நிகழ்வை அறநிலையத்துறை அதிகாரிகள் கைவிட்டனர்.

இந்நிலையில் பழைய கொடி மரத்தை அகற்றி விட்டு புதிய கொடி மரம்அமைக்கப்படும்எனசென்னை ஐகோர்ட்டில் இந்து சமய அறநிலையத்துறை உறுதி அளித்துள்ளது. புதிய கொடி மரம்அமைப்பதற்குஎதிர்ப்பு தெரிவித்து ஹரிஹரன் என்பவர் தொடர்ந்த வழக்கில் சென்னை ஐகோர்ட்டில் அறநிலையத்துறை இந்த பதிலை வழங்கி உள்ளது.

இதன்படி சேதமடைந்த பழைய கொடி மரத்தை அகற்றி விட்டு புதிய கொடி மரம் மட்டுமே அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரம்மோற்சவம் நடத்துவது தொடர்பான வழக்கு வேறொரு அமர்வில் விசாரணையில் உள்ளது. தற்போதைக்கு பிரம்மோற்சவம் நடத்தப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான இந்து அறநிலையத் துறையின் வாதத்தை மனுவாக தாக்கல் செய்ய சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

# சென்னையில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போலீஸ் பூத்



சென்னை, நவ.15

சென்னை கிண்டி அரசு பல்நோக்கு மருத்துவமனையில், புற்றுநோய் பிரிவு டாக்டர் பாலாஜியை, விக்னேஷ் என்ற இளைஞர் கத்தியால் குத்தினார். இதனால் காயமடைந்த டாக்டர் அதே மருத்துவமனையில்சிகிச்சைபெற்றுவருகிறார். இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், விக்னேஷ் மீது 7 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சூழலில் டாக்டரை தாக்கிய விக்னேசுக்கு 15 நாட்கள் நீதிமன்ற காவல் விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனையில் டாக்டர் தாக்கப்பட்ட நிலையில், சென்னையில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் போலீஸ் பூத் அமைக்கப்படும் என சென்னை மாநகர காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு போலீஸ் பூத்திலும் 10 போலீசார் பணியில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னையில் உள்ள 19 மருத்துவமனைகளில் ஏற்கனவே 9 மருத்துவமனைகளில் காவல் நிலையம், பூத்துகள் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 மருத்துவமனைகளிலும் போலீஸ் பூத்துகள் விரைவில் அமைக்கப்படும் என்று சென்னை மாநகர காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மருத்துவர்கள் போராட்டத்திற்கு பிரேமலதா விஜயகாந்த் ஆதரவு

சென்னை, நவ.15

சென்னை கிண்டி அரசு பல்நோக்கு மருத்துவமனையில், புற்றுநோய் பிரிவு டாக்டர் பாலாஜியை, விக்னேஷ் என்ற இளைஞர் கத்தியால் குத்தினார். இதனால் காயமடைந்த டாக்டர் அதே மருத்துவமனையில்சிகிச்சைபெற்றுவருகிறார். இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், விக்னேஷ் மீது 7 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த



சூழலில் டாக்டரை தாக்கிய விக்னேசுக்கு 15 நாட்கள் நீதிமன்ற காவல் விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் டாக்டர் மீதான தாக்குதல் சம்பவத்தை கண்டித்து இன்று காலை மருத்துவர்கள் தர்ணாவில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் , டாக்டர் பாலாஜியை சந்தித்து தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நலம் விசாரித்தார் .

தொடர்ந்து மருத்துவர்களின் தர்ணா போராட்டத்திற்கு அவர் ஆதரவு தெரிவித்துள்ளார் . கிண்டி அரசு மருத்துவமனையில், மருத்துவர்களுடன் சேர்ந்து தரையில் அமர்ந்து பிரேமலதா விஜயகாந்த் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

# நடிகை கஸ்தூரியை பிடிக்க 2 தனிப்படைகள் அமைப்பு

சென்னை, நவ.15

கடந்த 3ந்தேதி சென்னையில் பிராமண சமூகத்தினர் சார்பில் நடந்த கூட்டத்தில் நடிகை கஸ்தூரி பங்கேற்றார். அப்போது தெலுங்கு மக்கள் குறித்து அவதூறாக பேசியதாக பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அவர்,தெலுங்கு மக்கள் குறித்து தவறான கருத்துகளை தெரிவிக்கவில்லை. தவறாக பேசியதாக கருதினால் வருத்தம் தெரிவிப்பதாக அறிவித்தார். ஆனாலும் அவரது கருத்துகளுக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்தநிலையில் நடிகை கஸ்தூரி மீது அவதூறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மதுரை திருநகர் போலீசில், நாயுடு மகாஜன சங்கத்தினர் புகார் அளித்தனர். அந்த புகாரின்பேரில் போலீசார் பல்வேறு சட்டப்பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவு செய்தனர். இதுதொடர்பான விசாரணைக்கு ஆஜராகக்கோரி கஸ்தூரிக்கு போலீசார் சம்மன் வழங்க சென்றபோது முன்னதாகவே அவர் தனது வீட்டை பூட்டிவிட்டு தலைமறைவாகி விட்டார். செல்போனும் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளதால் நடிகை கஸ்தூரியை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். முன்னதாக கோயம்பேடு போலீசிலும் கஸ்தூரி மீது புகார் அளிக்கப்பட்டது. இந்த சூழலில் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அகில பாரத இந்து மக்கள் அமைப்பு சார்பில் புகார் அளிக்கப்பட்டது.

இதனிடையே வழக்கில் போலீஸ் கைதுக்கு பயந்து தலைமறைவாக உள்ள நடிகை கஸ்தூரி தனக்கு முன் ஜாமீன்வழங்ககோரி மதுரைஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த மதுரைஐகோர்ட்டு கிளை, கஸ்தூரி தாக்கல் செய்த முன் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து இன்று உத்தரவிட்டது.

இதுவழக்கு தொடர்பாக நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் கூறுகையில், "பேச்சுரிமை எனும் பெயரில் வெறுப்புணர்வை பரப்பவோ அல்லது சமூக மோதல்களைஏற்படுத்தவோகூடாது. சுதந்திரமாகப் பேசும் உரிமையை தவறாகப் பயன்படுத்தக் கூடாது. கற்றவர், சமூக ஆர்வலர் என தன்னைக் கூறிக் கொள்ளும் நடிகை கஸ்தூரியின் வாயிலிருந்து வந்துள்ள வார்த்தைகள் இழிவானவை.

தெலுங்கு பேசும் மக்களுக்கு எதிராக கஸ்தூரி பேசிய பேச்சு எந்தளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது என்பதை நீதிமன்றம் பார்க்க வேண்டி உள்ளது. கஸ்தூரியின் பேச்சு வெறுப்புப் பேச்சாகவே உள்ளது. மனுதாரரின் பேச்சு சமூக வலைதளங்களில் பரவியுள்ள நிலையில் அது வெடிகுண்டு போல் உள்ளது.

கஸ்தூரியின் டுவீட், மன்னிப்பு கேட்க உண்மையான முயற்சி மேற்கொண்டதாக தெரியவில்லை. இது போன்ற கேவலமான அறிக்கைகளை வெளியிடுபவர்கள் மீது சட்டத்தின்படி வழக்குத் தொடரப்பட்டால், அதிலிருந்துதப்பிக்கமன்னிப்பு கோருவது இனிமேல் ஏற்றுக்கொள்ளப்படாது. சொல்லப்பட்ட வார்த்தைகள் ஏற்கனவே வில்லிலிருந்து வெளியேறிய அம்பு போல அடைந்து சேதத்தை ஏற்படுத்திவிட்டது" என்று அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் தெலுங்கு மக்கள் குறித்து அவதூறாக பேசிய வழக்கில், தலைமறைவாக உள்ள நடிகை கஸ்தூரியை பிடிக்க 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. முன் ஜாமின் கோரி ஐகோர்ட்டு மதுரைக் கிளையில் நடிகை கஸ்தூரி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், மதுரை மாநகர காவல் துறை ஆணையர் லோகநாதன் உத்தரவின் பேரில் 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தினகனி



# மருத்துவர் தாக்கப்பட்ட விவகாரம்: யாருக்கும் பாதுகாப்பு இல்லாத ஆட்சி: த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம்



சென்னை, நவ.15

சென்னை கிண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் பாலாஜி மீது இன்று காலை தாக்குதல் நடத்தப்பட்டது. விக்னேஷ் என்ற நபர் மருத்துவர் பாலாஜியை மருத்துவமனையில் வைத்து கத்தியால் குத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தாக்குதல் நடத்திய விக்னேஷ் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

அரசு மருத்துவர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்க்கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், கிண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ்தளபதிவில், "தமிழ்நாட்டில் பட்டப் பகலில் அரங்கேறும் குற்றச் செயல்கள் சட்டம் ஒழுங்கின் சீர்கேட்டையே காட்டுகிறது என்று எங்கள் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் வாயிலாகக் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், அரசு ஊழியர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் என யாருக்கும் பாதுகாப்பு இல்லாத ஆட்சியாக இந்த ஆட்சி உள்ளது என்பது தினம் தினம் நிகழும் குற்றச் செயல்களால் நிரூபணமாகிறது."

"சென்னை கிண்டியில் உள்ள உயர் சிறப்பு அரசு மருத்துவமனையில், புற்றுநோய் மருத்துவர் திரு. பாலாஜி அவர்கள் இன்று கத்தியால் குத்தப்பட்ட சம்பவம், பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது."

"உயிர்காக்கும் சிகிச்சை அளிக்கும் இது போன்ற அரசு உயர் சிறப்பு மருத்துவமனையில், அரசு மருத்துவரின் உயிருக்கே பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டு இருப்பதற்குத் தமிழக அரசின் மெத்தனப் போக்கே காரணம். கத்திக் குத்தில் படுகாயம் அடைந்த மருத்துவர் திரு. பாலாஜி அவர்கள், விரைவில் பூரண குணமடைய பிரார்த்திக்கிறேன்."

"காலம் நேரம் பார்க்காது கடுமையாக உழைக்கும் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் சட்டப்பூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு முன்னெடுக்க வேண்டும்."

"தமிழ்நாட்டில் தினந்தோறும் நிகழும் பல்வேறு குற்ற நிகழ்வுகள், பொது மக்களிடையே அச்சத்தை உருவாக்கியுள்ளன. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய ஆட்சியாளர்கள் இனியாவது விழித்துக்கொண்டு மக்களைப் பாதுகாக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்," என குறிப்பிட்டுள்ளார்.

# திருவொற்றியூரில் பெண் வியாபாரி கொலை: டி.டி.வி.தினகரன் கண்டனம்

சென்னை, நவ.15

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது:

சென்னை திருவொற்றியூர் சன்னதி தெருவில் பெண் பழவியாபாரியை மாமூல் தர மறுத்ததாக கூறி கொடூரமாக கொலை செய்த ரவுடி, அதனை தடுக்க முயன்ற பெண்ணின் கணவரை தாக்கியதில் அவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.



காவல்துறையை சுதந்திரமாக செயல்பட அனுமதித்து சந்திசிரிக்கும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளை களைய தேவையான நடவடிக்கைகளை எடுப்பதோடு, பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ரவுடிகள் கலாச்சாரத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# தி.மு.க. உயர்நிலை செயல்திட்ட குழு கூட்டம் 20ந்தேதி நடக்கிறது




சென்னை, நவ.15

2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணி 200 தொகுதிகளில் வெற்றி பெற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இலக்கு நிர்ணயித்து உள்ளார்.

7வது முறையாக மீண்டும் தி.மு.க. ஆட்சியை பிடிக்க வேண்டும் என்று திட்டமிட்டு செயலாற்றி வருகிறார். இதற்காக 234 சட்டசபை தொகுதிகளிலும் தொகுதி வாரியாக தி.மு.க. தொகுதி பார்வையாளர்களை நியமித்துள்ளார்.

இவர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் நடைபெறும் கட்சிப் பணிகள் குறித்தும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் குறித்தும் விசாரித்து தலைமைக்கு தகவல் அனுப்பி விடுகின்றனர்.

சட்டசபை பொதுத்தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடமே உள்ளதால் (15 மாதம்) கட்சிப் பணிகளை வேகப்படுத்துவதற்காகவும் ஆலோசனைகள் வழங்குவதற்காகவும் தி.மு.க. உயர்நிலை செயல் திட்ட குழுக் கூட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 20ந்தேதி கூட்டி உள்ளார்.

இதுகுறித்து பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டு உள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:

தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம் வருகிற 20 ந்தேதி (புதன்கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

அப்போது உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். கழக ஆக்கப் பணிகள் குறித்து விவாதிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

இந்த குழுவில் முதலமைச்சருடன், பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கனிமொழி எம்.பி. உள்ளிட்ட 5 துணைப் பொதுச்செயலாளர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருச்சி சிவா, டி.கே.எஸ். இளங்கோவன், தயாநிதி மாறன், ஜெகத்ரட்சகன், பழனி மாணிக்கம், பொன்முடி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உள்பட 27 பேர் கலந்து கொள்ள உள்ளனர்.

# மாணவர்கள் வாயில் டேப் ஒட்டிய விவகாரம் : தலைமை ஆசிரியை உட்பட 3 ஆசிரியைகள் பணியிட மாற்றம்

தஞ்சாவூர், நவ.15

தஞ்சை மாவட்டம் அய்யம்பட்டியில் உள்ள தொடக்கப்பள்ளியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மாணவர்கள் வாயில் தலைமை ஆசிரியை டேப் ( பிளாஸ்திரி) ஒட்டியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது குறித்து நடவடிக்கை எடுக்க மாணவர்களின் பெற்றோர் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

இது குறித்து விசாரணை நடத்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு கலெக்டர் உத்தரவிட்டார். இதற்கிடையே நடந்த விசாரணையில் வகுப்பு ஆசிரியை சிறிது நேரம் ஒரு மாணவனை பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு மற்றொரு வகுப்பறைக்கு செல்லும்போது மாணவர்களே வாயில் டேப் ஒட்டியதாகவும், அதனை மற்றொரு ஆசிரியர் புகைப்படம் எடுத்து பரப்பியதாகவும் தெரியவந்தது.

ஆனால் இந்த சம்பவத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என தலைமை ஆசிரியை புனிதா தெரிவித்தார்.

இந்த நிலையில் சம்பந்தப்பட்ட அய்யம்பட்டி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை புனிதா, ஆசிரியைகள் பெல்சி சுமாகுலேட் பெர்சி, முருகேஸ்வரி ஆகிய 3 பேரையும் வெவ்வேறு பள்ளிகளுக்கு பணியிட மாற்றம் செய்து வட்டார கல்வி அலுவலர் தமிழ்வாணன் இன்று உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தவிர்க்க முடியாத சம்பவம்: இனி இதுபோன்று நடக்காமல் பார்த்துக் கொள்வோம் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, நவ.15

கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவரை நோயாளியின் மகன் கத்தியால் குத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இச்சம்பவத்திற்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட செய்தியில், கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் பாலாஜியை நோயாளியின் குடும்ப உறுப்பினர் ஒருவர் கத்தியால் குத்திய சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது.

இக்கொடுஞ்செயலில் ஈடுபட்ட நபர் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். மருத்துவர் பாலாஜிக்கு தேவையான அனைத்து சிகிச்சைகளை அளித்திடவும், இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணைநடத்திடவும் ஆணையிட்டுள்ளேன்.

அரசு மருத்துவமனைகளை நாடி வரும் நோயாளிகளுக்கு நேரம் காலம் பார்க்காமல் உரிய சிகிச்சை அளிப்பதில் நமது அரசு மருத்துவர்களின் தன்னலமற்ற பணி அளப்பரியது.

இப்பணியின்போது அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் நம் அனைவரின் கடமையாகும். இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுத்திடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், மருத்துவரை கத்தியால் குத்திய சம்பவத்தை கண்டித்து காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அரசு மருத்துவர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

# கற்பழிக்க முயன்ற பேராசிரியரை, போலீசில் சிக்க வைத்த இளம்பெண்

கோவை, நவ.15

கோவை வடவள்ளி அருகே உள்ள கல்வீரம்பாளையம் முருகன்நகர் நேரு வீதியைச் சேர்ந்தவர் சிவப்பிரகாசம் (45). கோவையில் உள்ள சில கல்லூரிகளில் கவுரவ பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

ஆராய்ச்சி பட்டம் பெறும் மாணவமாணவிகள் மற்றும் வேலை வாய்ப்பை எதிர்நோக்கி இருக்கும் மாணவர்கள் இவரிடம் ஆலோசனை பெறுவது வழக்கம். அதேபோல் திருப்பூர் மாவட்டம் கணியம்பூண்டி வச்சிப்பாளையத்தைச்சேர்ந்த 25 வயது பெண், பேராசிரியர் சிவப்பிரகாசத்தை தொடர்பு கொண்டார்.

அந்த பெண் எம்.எஸ்.சி. பட்டதாரி ஆவார். கோவையில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். அவருக்கு வெளிநாட்டில் போய் வேலை பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. இதற்காக அவர் சிவப்பிரகாசத்திடம் ஆலோசனை கேட்டுள்ளார். அதற்கு தனது வீட்டுக்கு வந்து தன்னை சந்திக்குமாறு கூறி இருக்கிறார். இளம்பெண்ணிடம் சிவப்பிரகாசம் சில சான்றிதழ்களை வாங்கி வைத்து இருக்கிறார். வீட்டுக்கு வரும்போது அந்த சான்றிதழ்களை தருவதாகவும் சொல்லி உள்ளார்.

சிவப்பிரகாசம் கூறியதை நம்பி கல்வீரம்பாளையத்தில் உள்ள அவரது வீட்டுக்கு அந்த பெண் மதிய நேரம் சென்றார். அங்கு வீட்டில் சிவப்பிரகாசம் மட்டும் இருந்தார். பெண்ணை ஹாலில் அமர வைத்து பேசிக் கொண்டு இருந்தார். திடீரென பெண்ணின் தோளில் சிவப்பிரகாசம் கையை போட்டார். இதனால் இளம்பெண் அதிர்ச்சி அடைந்தார்.

அந்த பெண் சுதாரிப்பதற்குள் சிவப்பிரகாசம் அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். மேலும் இளம்பெண்ணை அவர் கற்பழிக்கவும் முயன்று இருக்கிறார். சிவப்பிரகாசத்திடம் இருந்து தப்பிக்க வழிதேடிய பெண், சமயோகிதமாக திட்டமிட்டார். தான் அவசரமாக கழிவறைக்கு செல்ல வேண்டும் என சிவப்பிரகாசத்திடம் இளம்பெண் கூறி உள்ளார்.

வீட்டுக்குள் இருந்த கழிவறைக்கு சென்று உள்பக்கமாக இளம்பெண் பூட்டிக் கொண்டார். பின்னர் அங்கிருந்தே தனது தோழியை செல்போனில் அழைத்து விவரத்தை கூறி இருக்கிறார். போலீசுக்கு தகவல் தெரிவித்து தன்னை காப்பாற்றுமாறு சொல்லி கெஞ்சி உள்ளார்.

அடுத்த கணமே பெண்ணின் தோழி போலீசுக்கு தகவல் கொடுக்க, போலீசார் பேராசிரியரின் வீட்டுக்கு விரைந்து சென்று கதவை தட்டினர். கதவை திறந்து பார்த்த பேராசிரியர் அதிர்ச்சி அடைந்தார். போலீசை பார்த்ததும் அவருக்கு வியர்த்து கொட்டியது.

போலீசார் அதிரடியாக வீட்டுக்குள் சென்று கழிவறையில் பதுங்கி இருந்த இளம்பெண்ணை மீட்டனர். போலீசாரை கண்டதும் இளம்பெண் கண்ணீர் விட்டு கதறி அழுது நடந்த விவரங்களை கூறினார்.

இதுதொடர்பாக எழுத்துப்பூர்வமாக கோவை அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் இளம்பெண் புகார் செய்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் பழனியம்மாள், விசாரணை நடத்தி பெண்ணை கற்பழிக்க முயன்றதாக வழக்குப்பதிவு செய்து பேராசிரியர் சிவப்பிரகாசத்தை கைது செய்தனர்.

ஆலோசனை வழங்குகிறேன் என்ற பெயரில் பெண்ணை தனியாக அழைத்து பேராசிரியர் கற்பழிக்க முயன்ற சம்பவம் கோவையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இறந்த ஆசிரியருக்கு ஓய்வூதியம் பெற்று ரூ.49.69 லட்சம் சுருட்டல் உயிரோடு இருப்பதாக சான்றிதழ் பெற்று நூதன மோசடி

துறையூர், நவ.15

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே உள்ள மாராடி கிராமத்தைச் சேர்ந்தவர் ரெங்கராஜன். இவர்துறையூரில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளி ஒன்றில் வரலாற்று ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவருக்கு துறையூர் சார் நிலை கருவூலம் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் ரெங்கராஜன் கடந்த 2015ம் ஆண்டு இயற்கையாக மரணமடைந்துள்ளார்.

ரெங்கராஜனின் வாரிசுகளான மனைவி ஜெயக்கொடி மற்றும் மகன் ஜெயதேவன் ஆகிய 2 பேரும், அவரின் இறப்பு குறித்து சார்நிலை கருவூலத்திற்கு தகவல் தெரிவிக்காமல் மறைத்துள்ளனர். மேலும் கருவூலம் மற்றும் கணக்கு துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் உயிருடன் உள்ளனரா? என்பதை அறிய நேர்காணல் நடத்தப்படும்.

நேர்காணலுக்கு வர இயலாதவர்கள் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் இருந்து ஓய்வூதிய உயிர் வாழ் சான்று பெற்று சார் நிலை கருவூலத்தில் அளிப்பது வழக்கம். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் ஓய்வூதியர்கள் அளிக்கும் உயிர்வாழ் சான்றினை இறந்த ரெங்கராஜனின் வாரிசுகள் பல்வேறு முறைகளில் மோசடியாக அளித்து, ரெங்கராஜனின் ஓய்வூதியம் அவரது வங்கி கணக்கிற்கு தொடர்ந்து வருமாறு செய்துள்ளனர்.

இவ்வாறு வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் ஓய்வூதியத்தை ஜெயக்கொடி மற்றும் ஜெயதேவன் ஆகிய இருவரும் பல்வேறு தவணைகளில், பல்வேறு காசோலைகள் வாயிலாக கடந்த 2015ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2024ம் ஆண்டு மே மாதம் வரை ரூ.49 லட்சத்து 69 ஆயிரத்து 279 வரையிலான தொகையினை அரசினை ஏமாற்றி பெற்றுள்ளனர்.

இந்நிலையில் இந்த ஆண்டு நடைபெற்ற நேர்காணலுக்கு ரெங்கராஜன் வராததால், சந்தேகமடைந்த கருவூல அதிகாரிகள் ரெங்கராஜனின் இருப்பிட முகவரிக்கு நேரில் சென்று விசாரணை செய்த போது, ரெங்கராஜன் கடந்த 2015ம் ஆண்டே இறந்ததை அறிந்து அதிர்ச்சி அடைந்தனர்.

மேலும் கடந்த வருடம் அளித்த ஓய்வூதிய உயிர் வாழ் சான்றினை ஆய்வு செய்ததில், 2015 ஆம் ஆண்டு இறந்த ரெங்கராஜனுக்கு மாராடி கிராம நிர்வாக அலுவலர் ஹேமலதா என்பவர் 26.9.2022 அன்று ரெங்கராஜன் உயிருடன் இருப்பதாக கூறி, உயிர் வாழ் உறுதி சான்று அளித்ததை அறிந்து அதிகாரிகள் மேலும் அதிர்ச்சி அடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக துறையூர் உதவி கருவூல அலுவலர் துறையூர் போலீசில் புகார் செய்தார். இப்புகாரின் பேரில் துறையூர் போலீசார் மோசடி நடைபெற்ற விதம், மோசடிக்கு உடந்தையாக இருந்தவர்கள் பற்றி விரிவான விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். துறையூர் அருகே இறந்தவரின் இறப்பை மறைத்து மோசடியாக ஓய்வூதியம் பெற்று வந்து, தற்சமயம் வெளியான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மருத்துவர் தாக்கப்பட்ட விவகாரம்: மகன் செய்தது சரி என்று கூறவில்லை; கைதான விக்னேஷின் தாய்




சென்னை, நவ.15

சென்னை கிண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் பாலாஜி மீது இன்று காலை தாக்குதல் நடத்தப்பட்டது. விக்னேஷ் என்ற நபர் மருத்துவர் பாலாஜியை மருத்துவமனையில் வைத்து கத்தியால் குத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தாக்குதல் நடத்திய விக்னேஷ் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில், மருத்துவரை தாக்கிய விக்னேஷின் தாய் பேட்டியளித்தார். அப்போது பேசிய அவர், "எனக்கு உடல் நிலை சரியில்லாததால் சிகிச்சை பெற்றேன். மருத்துவர்பாலாஜியை சந்தித்து சிகிச்சை பெற்று வந்தேன். கடந்த மாதம் 14, 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் சிகிச்சை பெற்ரேன். யார் மருத்துவர் என கேட்டு மரியாதை குறைவாக பேசுவார். காலை 10 மணிக்கு சென்ற எனக்கு மாலை வரை சிகிச்சை அளிக்கவில்லை."

"தனியார் மருத்துவமனையில் என்னை காப்பாற்ற முடியாது என கூறிவிட்டனர். சரியான சிகிச்சை அளிக்கவில்லை என்று நான் குறை கூறவில்லை. 25 ஆண்டு அனுபவம் உள்ள மருத்துவர் என் உடலில் என்ன பிரச்சினை என்பதை ஏன் கண்டுபிடிக்கவில்லை. உரிய ஸ்கேன் ரிப்போர்ட் இருந்தும் கண்டுபிடிக்க முடியவில்லையா."

"தனியார் மருத்துவமனையில் வைத்து என்னை பார்த்துக் கொள்ள எனது மகன் மிகவும் சிரமம்பட்டான். நான் பிழைப்பது கஷ்டம் என கூறியதால் என் மகன் மன உளைச்சலில் இருந்தான். என்னை மிகவும் கஷ்டமான நிலையில் பார்த்ததால் இப்படி செய்தானா என்று தெரியவில்லை. என் மகன் நேரடியாக கத்தியால் குத்தினான், ஆனால் 25 ஆண்டு அனுபவம் உள்ள மருத்துவர் என் நுரையீரலை எடுத்து விட்டார்."

"எனக்கு ஏதாவது ஒன்று என்றால் என் மகன் தாங்க மாட்டான். என்னை இழந்ததை பற்றி நான் யோசிக்கவில்லை. நான் பொய் பேச வேண்டிய அவசியம் இல்லை. எனக்கு அளித்த சிகிச்சைகளை மருத்துவர் முறையாக கவனிக்கவில்லை. எனது மகன் செய்தது சரி என்று நான் கூறவில்லை. மருத்துவர் பாலாஜி மீது கடும் கோபம் உள்ளது. மருத்துவர் பாலாஜி என்னை ஆங்கிலத்தில் திட்டுவார்," என்று தெரிவித்தார்.

# சிறுமியை தொடர்ந்து பாலியல் பலாத்காரம் செய்த வாலிபர் கைது

திருச்சி, நவ.15

திருச்சி அருகே உள்ள மருங்காபுரி பகுதியை சேர்ந்தவர் வெங்கட்ராமன் இவர் அதே பகுதியை சேர்ந்த ஒரு சிறுமியிடம், தன்னை காதலிக்குமாறு பலமுறை ஆசைவார்த்தை கூறியுள்ளார். இதை நம்பிய அந்த சிறுமி வெங்கட்ராமனை காதலித்துவந்துள்ளார். இதனிடையே வெங்கட்ராமன் தனது செல்போனை அந்த சிறுமியிடம் கொடுத்து இருவரும் அடிக்கடி பேசி வந்துள்ளனர். கடந்த 2020ம் ஆண்டு சிறுமியை திருமணம் செய்து கொள்வதாக கூறி கட்டாயப்படுத்தி பாலியல் பலாத்காரம் செய்து அதனை வெங்கட்ராமன் தனது செல்போனில் வீடியோவாக எடுத்துவைத்துள்ளார். பின்னர் அந்த ஆபாச வீடியோவை சிறுமியிடம் காண்பித்து மிரட்டி பலமுறை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதனால் பாதிக்கப்பட்ட சிறுமி, மிரட்டலுக்கு பயந்து நீண்ட நாட்களாக யாரிடமும் சொல்லாமல் இருந்து வந்துள்ளார். அதன்பிறகு அந்த சிறுமியின் குடும்பத்தினர் வேறு பகுதிக்கு குடிபெயர்ந்தனர். ஆனாலும் வெங்கட்ராமன் சிறுமியை மிரட்டியதுடன் அவருக்கு தாலி கட்டி அதனை போட்டோ எடுத்து வைத்துக்கொண்டார்.

இந்த நிலையில் வெங்கட்ராமன், சிறுமியிடம் தன்னுடன் தொடர்ந்து பாலியல் உறவுக்குட்பட வேண்டும். இல்லையென்றால் தான் எடுத்த வீடியோக்களை சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுவிடுவேன் என மிரட்டி வந்துள்ளார். இதுகுறித்து அந்த சிறுமி மணப்பாறை அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் வெங்கட்ராமன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, அவரை கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மருத்துவருக்கு கத்திக்குத்து சட்டம் ஒழுங்கை காக்க நடவடிக்கை தேவை: இபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை, நவ.15

தாயாருக்கு சரியாக சிகிச்சை அளிக்கவில்லை என விக்னேஷ் என்பவர் கிண்டி கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவர் பாலாஜியின் கழுத்து, காதின் பின்புறம், நெற்றி, முதுகு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கத்தியால் குத்தியுள்ளார்.

மருத்துவருக்கு உடனடியாக அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டு தற்போது மயக்க நிலையில் உள்ளார். மருத்துவர் இதய நோயாளி என்பதால் 8 மணி நேரத்திற்கு பிறகே அவரின் நிலை குறித்து தெரிவிக்கப்படும் என தெரிய வந்துள்ளது.

தாக்குதல் நடத்திய விக்னேஷ் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மருத்துவருக்கு தேவையான சிகிச்சைகளை அளித்திடவும், இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்திடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

இந்நிலையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சம்பவம் நடந்த



மருத்துவமனைக்கு நேரில் ஆய்வு செய்தார். தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள அரசு மருத்துவரின் உடல் நிலை குறித்து உதயநிதி கேட்டறிந்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

மருத்துவர் உடல் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்படு வருகிறது. அவரது தலைப் பகுதியில் 4 இடங்களில் கத்தியால் குத்தப்பட்டுள்ளது. ஆறு மாதங்களாக சிகிச்சையில் இருந்த தாயாருடன் வருபவர் என்பதால் சந்தேகம் எழவில்லை.

இது தவிர்க்க முடியாத சம்பவம். இதுபோல் இனி நடக்காமல் பார்த்துக் கொள்வோம். மருத்துவர் குடுப்பத்திற்கு ஆறுதல் கூறியுள்ளோம்.

# திருவொற்றியூரில் ரசாயன வாயு கசிவு ஏற்பட்ட பள்ளி 15 நாட்களுக்குப் பிறகு திறப்பு

திருவொற்றியூர், நவ.15

திருவொற்றியூர் கிராமத் தெருவில் உள்ள விக்டரி மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் கடந்த மாதம் 25ந் தேதியும், மீண்டும் கடந்த 4ந்தேதியும் என 2 முறை ரசாயன வாயு கசிவு ஏற்பட்டது. இதில் மாணவிகளுக்கு மயக்கம், மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர்.

மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள், காற்றின் தரத்தை கண்காணிக்கும் வாகனத்தை பள்ளி வளாகத்திலேயே நிறுத்தி 100 மணி நேரம் கண்காணித்தனர். இதில் கடந்த 4ந் தேதி மாணவிகளுக்கு இடைவேளை




விட்ட நேரத்தில் 10.40 மணி முதல் 10.50 மணி வரை ரசாயன கசிவு ஏற்பட்டு உள்ளது தெரிந்தது. இதனால் பள்ளிக்கு காலவரையின்றி விடுமுறை விடப்பட்டது. 10ம் வகுப்பு, பிளஸ்1, பிளஸ்2 மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள் நடந்து வந்தது.

அதன் பிறகு பள்ளி திறப்பது தொடர்பாக ஆர்.டி.ஓ. இப்ராஹிம் தலைமையில் மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு முன்னிலையில் மாணவர்களின் பெற்றோருடன் காவல்துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம், மருத்துவத்துறையினர் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கேற்ற 10, 11, 12ம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர், தங்கள் பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படுவதால் உடனடியாக பள்ளியை திறக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இந்நிலையில் பொதுத் தேர்வு எழுதக்கூடிய பத்தாம் வகுப்பு, 11, மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு முதற்கட்டமாக வகுப்புகள்இன்றுதொடங்கப்பட்டுள்ளது. மேலும் மற்ற வகுப்பு மாணவிகளுக்கு படிப்படியாக வகுப்புகள் தொடங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# விடிய விடிய மழை: பள்ளி, கல்லூரிகளுக்கு நனைந்து சென்ற மாணவர்கள்

புதுச்சேரி, நவ.14

வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு கடந்த 15 நந்தேதி தொடங்கியது. தொடக்கத்தில் ஒரு சில நாட்கள் கனமழை பெய்தது.

அதன்பிறகு மழை பெய்ய வில்லை.

அதேநேரத்தில் தீபாவளியன்று கனமழை பெய்தது. இதன்பிறகு மீண்டும் பெரியளவில் மழை பெய்யவில்லை. வழக்கம் போல் வெயில் அடித்து வந்தது.

இந்நிலையில் தென் மேற்கு வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதாக வானிலை மையம் தெரி வித்தது. இதனால் தமிழகம், புதுவை, ஆந்திரா கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும் என் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இதையடுத்து நேற்றைய தினம் புதுவையில்



வானிலை முற்றிலுமாக மாறியது. காலை முதலே லேசான குளிர்ந்த காற்றுடன் வானம் மப்பும், மந்தாரமுமாக இருந்தது. அவ்வப்போது சாரல் மழை பெய்தது. மாலை 4 மணிக்கு லேசான மழை பெய்தது.

இதன்பிறகு இரவு 10 மணிக்கு மேல் இடி, மின்னலுடன் மழை பெய்ய தொடங்கியது.

இந்த மழை விடிய விடிய தொடர்ந்தது. இதனால் நகர பகுதியில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்க தொடங்கியது. ரெயின்போ நகர், கிருஷ்ணா நகர், எழில் நகர் ஆகிய பகுதிகளில் மழை நீர் சாலைகளில் தேங்கியுள்ளது.

விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள லாஸ் பேட்டை, கருவடிக்குப்பம், கிருஷ்ணா நகர், கோரிமேடு ஆகிய பகுதிகளில் தொடர் மழை காரணமாக பாதுகாப்பு கருதி மின் வினியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இன்று காலை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. வானம் இருண்டு கருமேககூட்டத்துடன் காணப்படுகிறது. வெளிச்சமே இல்லை. வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டு சென்றன.

இதேபோல காரைக்காலிலும் கனமழை பெய்தது. மழை காரணமாக காரைக்கால் மாவட்ட அரசு, தனியார் பள்ளி, கல்லூரி களுக்கு இன்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

புதுவையில் தொடர் மழை பெய்தாலும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்படவில்லை. இதனால் பள்ளி, கல்லூரிக்கு சென்ற மாணவர்கள்மழையில் நனைந்தபடியே மிகுந்த அவதியுடன் சென்றனர்.

# கார்த்திகை தீபத் திருவிழாவுக்காக அகல் விளக்குகள் தயாரிக்கும் பணி மும்முரம்

குள்ளனம்பட்டி, நவ.15

திண்டுக்கல் மாவட்டம் நத்தம், வேடப்பட்டி, நொச்சி ஓடைப்பட்டி ஆகிய பகுதிகளில் மண்பாண்ட தொழிலாளர்கள் அதிகம் உள்ளனர். இங்கு பானைகள், சாமி சிலைகள், வீட்டு அலங்கார பொருள், பரிசு பொருட்கள், கார்த்திகை விளக்குகளை களி மண்ணால் செய்து தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

இங்கு கார்த்திகை தீப திருநாளுக்காக விளக்குகள் தயாரிக்கும் பணியில் மண்பாண்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நாகரீக வளர்ச்சியினால் பீங்கான், மெழுகினால் செய்யப்பட்ட விளக்குகள் விற்பனைக்கு வந்தாலும், மண் விளக்குகளுக்கு இன்னும் மவுசு குறையவில்லை. மண்



ணால் செய்யப்பட்ட சிறிய அகல் விளக்கு ரூ.1 முதல் ரூ.5 வரை விற்கப்படுகிறது.

வெளி மாவட்டம், மாநில விற்பனையாளர்கள் தேவையான விளக்குகளை மொத்தமாக ஆர்டர் கொடுத்து வாங்கி செல்கின்றனர்.

சாதாரண மண் விளக்குகள் மட்டுமின்றி, தட்டு விளக்கு, மொரம் விளக்கு, காமாட்சி விளக்கு, மேஜிக் விளக்கு, ஆரத்தி தட்டு விளக்கு உள்ளிட்ட வெவ்வேறு டிசைன்களிலும் விளக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

களி மண்ணால் செய்யப்பட்ட மனை விளக்கு, பெரிய மனை விளக்கு, உருளி விளக்கு, சாமி சிலை வைத்த உருளி விளக்கு, 5 விளக்குகள் கொண்ட தாமரை விளக்கு என புதிய டிசைன்களில் ரூ.200 முதல் ரூ.1000 வரை விற்பனைக்கு தயாராகி வருகின்றன.

இதுகுறித்து கலைடெர கோட்டா உரிமையாளர் கஜேந்திரன் கூறியதாவது:

மண்ணால் செய்யப்படும் பொருட்களின் செய் கூலி, விற்கும் விலையை விட அதிகம். ஆனாலும், மக்கள் மத்தியில் மண்ணால் செய்யப்படும் பொருட்களுக்கு வரவேற்பு இருக்கிறது. இதனால் இந்த தொழிலை தொடர்ந்து செய்து வருகிறோம்.

இங்கு தயாரிக்கப்படும் விளக்குகள் மதுரை, திருச்சி, தஞ்சை, கோயம்புத்தூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும்,அண்டைமாநிலமான கேரளா, ஆந்திர பிரதேசம், கர்நாடகா ஆகிய பகுதிகளுக்கும் விற்பனைக்காக வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

மண் பாண்ட கலையும், தொழிலும் அழியாமல் இருக்கவும், தொழிலாளர்களின்வாழ்வாதாரம் மேம்படவும் அரசு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மருத்துவருக்கு கத்திக்குத்து சட்டம் ஒழுங்கை காக்க நடவடிக்கை தேவை: இபிஎஸ் வலியுறுத்தல்

திண்டுக்கல், நவ.15

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள டி.கள்ளிப்பட்டியைச் சேர்ந்த சுப்புராஜ் மகன் நாகமுத்து (22). இவர் கைலாசபட்டியில் உள்ள கைலாசநாதர் கோவில் பூசாரியாக இருந்து வந்தார்.

கோவிலில் கடை ஒதுக்குவது தொடர்பாக இவருக்கும், முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் தம்பியுமான ஓ.ராஜாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2012ம் ஆண்டு டிசம்பர் 7ந் தேதி நாகமுத்து தற்கொலை செய்து கொண்டார். இவரை தற்கொலைக்கு தூண்டியதாக கோவில் அறங்காவலராகவும், பெரியகுளம் முன்னாள் நகர்மன்ற தலைவராகவும் இருந்த ஓ.ராஜா, தென்கரை பேரூராட்சி முன்னாள் தலைவர் பாண்டி உள்பட 7 பேர் மீது பெரியகுளம் தென்கரை போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

மதுரை ஐகோர்ட்டு கிளை உத்தரவுப்படி கடந்த 2015ம் ஆண்டு



டிசம்பர் மாதம் முதல் இந்த வழக்கு திண்டுக்கல் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. வழக்கு விசாரணை நடைபெற்ற போதே பாண்டி என்பவர் இறந்து விட்டார். மற்ற 6 பேர் மீதான வழக்கு விசாரணை தற்போது திண்டுக்கல் மாவட்ட பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஓ.ராஜா, மணிமாறன், சிவக்குமார், ஞானம், லோகு, சரவணன் ஆகியோர் நிபந்தனையற்ற ஜாமீன் பெற்று இருப்பதால் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகி வந்தனர்.

இந்த வழக்கில் 23 சாட்சியங்கள் விசாரணை செய்யப்பட்டு 196 பக்க குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 4 தடயங்கள், சாட்சியங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அரசு தரப்பின் இறுதி கட்ட வாதத்திற்கு பின் இன்று தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து ஓ.ராஜா உள்பட 6 பேரும் காலையிலேயே கோர்ட்டில் ஆஜராகினர். பழங்குடியின மற்றும் பட்டியலின சிறப்பு நீதிமன்ற நீதிபதி முரளிதரன் குற்றம் சாட்டப்பட்ட 6 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். சாட்சிகள் அளித்த தகவல்கள் ஒருமனதாக இல்லை என்றும், தற்கொலைக்கு தூண்டியதற்கான அடிப்படை முகாந்திரம் இல்லாததால் விடுதலை செய்யப்படுவதாக தெரிவித்தனர்.

இந்த வழக்கில் தற்கொலை செய்து கொண்ட நாகமுத்துவின் தந்தை சுப்புராஜ் மனுதாரராக இருந்த நிலையில் அரசு தரப்பு வக்கீலாக பாப்பு மோகன் வாதாடினார். தீர்ப்புக்கு பின்பு அவர் தெரிவிக்கையில்,

இந்த வழக்கில் மேல்முறையீடு செய்து நாகமுத்துவின் இறப்பிற்கு நீதி கிடைக்க போராடுவோம் என்றார்.

தீர்ப்பு குறித்து ஓ.ராஜா தெரிவிக்கையில்,

இந்த வழக்கில் என்மீது பொய்யான புகார் அளிக்கப்பட்டது. 12 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது நீதி மன்றம் மூலம் நான் குற்றமற்றவன் என நிருபிக்கப்பட்டுள்ளது. மேல் முறையீடு செய்தாலும் நான் குற்றம் செய்ய வில்லை என நிரூபிப்பேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சமூக நலக்கூடம் திட்டத்தை தொடங்கி வைத்த விஜய் வசந்த் எம்.பி.

சென்னை, நவ.15

அஞ்சுகிராமம், மயிலாடி நாஞ்சில் நாடு புத்தனார் கால்வாய் தீர்த்தவாரி மருங்கூர் சுப்பிரமணிய சுவாமிக்கு ஆராட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் கன்னியாகுமரி தொகுதி காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார் மற்றும் ஆராதனையில் பக்தர்களுடன் பங்கேற்றார்.

மேலும் கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரத்தில் புதிய சமூக நலக் கூடம் கட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த கூடம்



அமைக்கும் பூமி பூஜை விழாவிலும் விஜய் வசந்த் எம்பி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.

# திருவண்ணாமலையை போல அனைத்து கோவில்களிலும் கார்த்திகை தீபம் ஏற்றப்படும்: அமைச்சர் தகவல்

வேங்கிக்கால், நவ.15

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத் திருவிழா டிசம்பர் 13ந் தேதி நடைபெறுகிறது. மகா தீபத்தைக் காண சுமார் 40 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்வது தொடர்பான அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.

இதில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

கடந்த ஆண்டு தீபத் திருவிழாவுக்கு 35 லட்சம் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டன. இந்த




ஆண்டு கூடுதலாக 20 சதவீத பக்தர்களுக்கு என மொத்தம் 42 லட்சம் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

கூடுதலாக தற்காலிகப் பஸ் நிலையங்கள் அமைக்கப்படும். நெரிசலைத் தவிர்க்க போதிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழா நாளில் அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படுவதைப்போல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கோவில்களிலும் தீபம் ஏற்றப்படும்

தீபம் ஏற்ற தேவையான நெய், எண்ணெய் மற்றும் திரி ஆகியவற்றை இந்துசமய அறநிலையத்துறை சார்பில் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வுக் கூட்டத்தில் பொதுப் பணி, நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

பரணி தீபத்தைக் காண வரும் கட்டளைதாரர்கள், உபயதாரர்கள், பக்தர்களுக்கு ஒரே மாதிரியான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டு 2ம் பிரகாரத்தில் இருந்து பரணி தீபத்தைக் காண ஒரு வண்ணத்திலும், 3ம் பிரகாரத்தில் இருந்து காண மற்றொரு வண்ணத்திலும் அனுமதிச் சீட்டுகளை அச்சடித்து வழங்க வேண்டும்.

தீபத் திருவிழாவைக் காண தவறான அனுமதிச் சீட்டுகளுடன் வரும் பக்தர்கள் மீது போலீசார் மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். எம்.எல்.ஏ.க்களுக்கு வழங்கப்படும் அனுமதிச் சீட்டுகளை அவர்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பயிர் சாகுபடியை அளவீடு செய்வதற்கு வேளாண் கல்லூரி மாணவர்களை ஈடுபடுத்துவது வேதனைக்குரிய செயல் ஓபிஎஸ்

சென்னை, நவ.15

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

ஒருங்கிணைந்த வேளாண் திட்டங்களை வகுக்க ஏதுவாக, மாநிலத்தில் உள்ள நிலங்களின் தன்மை, அளவு, பயிர் வகைகள், விவசாயிகளின் வருமானம், கடன், காப்பீடு போன்ற விவரங்களை மின்னணு முறையில் தொகுத்தளிக்க மத்திய அரசு கோரியிருந்த நிலையில், இந்தப் பணிகளை வருவாய்த் துறை மூலம் தமிழ்நாடு அரசு மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், கடந்த ஒரு வார காலமாக, மேற்படி பணியை நாமக்கல், கடலூர், திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அரசு மற்றும் தனியார் வேளாண் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் ஈடுபடுத்தப்பட்டு இருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

கடந்த மூன்று ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் மாநில அரசின் வரம்பிற்குட்பட்ட அனைத்து வரிகளும் பன்மடங்கு உயர்த்தப்பட்ட



நிலையில், வருவாய்த் துறையினருக்கு ஊக்கத் தொகை கொடுக்க இயலவில்லை என்று தி.மு.க. அரசு கூறுவது மிகவும் வேதனைக்குரிய செயலாகும்.

எனவே, பயிர் சாகுபடி குறித்த மின்னணு அளவீடு பணிகளை வருவாய்த் துறை மூலம் மேற்கொள்ளவும், மேற்படி பணியிலிருந்து வேளாண் கல்லூரி மாணவ, மாணவியரை விடுவிக்கவும் தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினகனி



# எடப்பாடி பழனிசாமிக்கு பாராட்டுவிழா நடத்துவது விந்தையாக உள்ளது

## அமைச்சர் துரைமுருகன் கிண்டல்



சென்னை, நவ.15

அமைச்சர்துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

மேட்டூர் அணையின் வெள்ள உபரி நீரை சேலம் மாவட்டம் சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் திட்டத்தின் பணிகள் கடந்த 2020ம் ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கம் 79 ஏரிகளுக்கு நீர் வழங்குவது. இந்த திட்டம் தொடங்கப்பட்டபோது மதிப்பிடப்பட்ட தொகை ரூ.565 கோடி.

தி.மு.க. பதவியேற்ற மே 2021க்கு முன் இடைப்பட்ட ஒரு வருட காலத்தில் இத்திட்டத்திற்கு 404.4 கோடி ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது. இந்த 404.4 கோடியில், 33 கிலோ மீட்டர் நீளத்திற்கு இரும்பு குழாய்கள், மின் மோட்டார்கள், வால்வுகள், இதர உபகரணங்கள் வாங்க செலவிடப்பட்ட தொகை 312 கோடி. இத்திட்டத்திற்கு 287 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட திட்டமிடப்பட்டது. அதில் 48 ஏக்கர் மட்டுமே அந்த ஓராண்டில் கையகப்படுத்தப்பட்டு எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் எம். காளிப்பட்டி ஏரிக்கு மட்டுமே தண்ணீர் கொடுக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.673.88 கோடி. இத்திட்டத்தில் மேலும் மூன்று ஏரிகளுக்கு (செக்கான் ஓரி, கொத்திக்குட்டை பி.என். பட்டி ஏரிகளுக்கு) நீர் வழங்க முடிவு செய்யப்பட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு, செலவிடப்பட்ட தொகை ரூ.252.96 கோடியில் மூன்று நீரேற்று நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 27 மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டு, 33 கிலோமீட்டருக்கு இரும்பு குழாய் பைப்கள் பதிக்கப்பட்டு இத்திட்டம் முழுமையாகச் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. நிலம் கையகப்படுத்துதலில், 270 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு இத்துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், தற்போதுவரை 56 ஏரிகளுக்கு தண்ணீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, 40 ஏரிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் முதலில் 100 ஏரிகளுக்கு நீர் வழங்கும் நோக்கில் பரிசீலிக்கப்பட்டாலும், அரசாணை வழங்கும் போது 79 ஏரிகளுக்கு மட்டுமே அரசாணை வழங்கப்பட்டது. 21 ஏரி பட்டா குட்டை என்பதால் அவை எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால், எதையுமே தவறாகச் சித்தரிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இந்த திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஒவ்வொரு முறையும் 100 ஏரி என்றே தவறாகக் குறிப்பிடுகிறார்.

ஆக, அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு வருட காலத்தில் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ஏறக்குறைய 70 சதவிகிதம் செலவினம் செய்து 1 ஏரிக்கு மட்டுமே தண்ணீர் வழங்கப்பட்டது. இதர பணிகளை கருத்தில் கொண்டாலும், சுமார் 30 சதவிகித பணிகள் மட்டுமே செய்யப்பட்டிருந்தது. மாறாக, தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்பு மீதம் இருந்த 30 சதவிகித செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 70 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டு, இத்திட்டம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்க, எம்.காளிப்பட்டி ஏரிக்கு மட்டும் தண்ணீர் கொடுத்த எடப்பாடி பழனிசாமிக்கு இத்திட்டத்தையே முழுமையாகச் செய்து முடித்தது போன்று சித்தரித்து எம்.காளிப்பட்டி விவசாய சங்கங்கள் பாராட்டுவிழா நடத்துவது விந்தையாக உள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# டாக்டருக்கு கத்திக்குத்து: கைதானவர் மீது கொலைமுயற்சி உள்பட 5 பிரிவுகளில் வழக்கு



கிண்டி, நவ.15

சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் தனது தாய்க்கு சரியாக சிகிச்சை அளிக்கவில்லை என விக்னேஷ் என்பவர் பணியில் இருந்த டாக்டர் பாலாஜியை கத்தியால் குத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதலில் படுகாயம் அடைந்த டாக்டர் பாலாஜி, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திய நபரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். டாக்டர் பாலாஜிக்கு தேவையான அனைத்து சிகிச்சைகளை அளித்திடவும், இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தவும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே அரசு மருத்துவமனையில் டாக்டர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்திற்கு எதிர்க்கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். கத்திக்குத்து தாக்குதலில் காயமடைந்து கிண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் டாக்டர் பாலாஜியை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் விஜயபாஸ்கர், ஜெயக்குமார், கடம்பூர் ராஜு உள்ளிட்டோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

தமிழக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் டாக்டர் பாலாஜியை, நேரில் சந்தித்து, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்த விவகாரத்தில், முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அவருடைய குடும்பத்தினரிடமும், டாக்டர்களிடமும் அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள விக்னேஷ், போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில், "கடந்த ஜனவரி மாதம் முதல் எனது தாய்க்கு டாக்டர் பாலாஜியிடம் சிகிச்சைக்கு சென்றேன். எனது தாய்க்கு கீமோ சிகிச்சை அளித்து வந்த நிலையில் உடல் நிலையில் முன்னேற்றம் இல்லை. தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றபோது தாயின் உடல் நிலை தேறியது. தனியார் மருத்துவமனையில் ஒவ்வொரு முறை சிகிச்சைக்கும் 20 ஆயிரம் வரை செலவானது.

எனது தாய்க்கு, முறையாக சிகிச்சை அளிக்காத டாக்டர் பாலாஜியிடம் மருத்துவ செலவுக்கான பணத்தை தருமாறு கேட்டேன். அப்போது வாக்குவாதம் ஏற்பட்டது. டாக்டர் பாலாஜி என்னை திட்டி கீழே தள்ளினார். அப்போது ஆத்திரத்தில் மறைத்து வைத்து இருந்த கத்தியை எடுத்து குத்தினேன்" என்று கூறியுள்ளார்.

இந்த நிலையில் அரசு டாக்டர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திய விக்னேஷ் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. கொலை முயற்சி, ஆபாசமாக பேசுதல் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் கிண்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

டாக்டர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை கண்டித்து இன்று மாலை 6 மணி முதல் நாளை மாலை 6 மணி வரை டாக்டர்கள் ஒருநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக இந்திய மருத்துவ சங்கத்தின் தமிழ்நாடு பிரிவு அறிவித்துள்ளது.

# 2 கட்டு பீடி தான் கொடுப்பீர்களா? 2 கைதிகள் தற்கொலை முயற்சி

நெல்லை, நவ.15

தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில் சிறை தண்டனை அனுபவித்து வரும் தண்டனை கைதிகளுக்கும், விசாரணை கைதிகளுக்கும் சிறைத்துறை சார்பில் சில சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சில கைதிகளின் பழக்க வழக்கத்தை பொறுத்து மாதந்தோறும் குறிப்பிட்ட அளவில் பீடி கட்டுகள் வழங்கப்படுவது வழக்கம்.

கைதிகளின் உறவினர்கள் அவர்களை பார்க்க வரும் போது அவர்களுக்கு தின்பண்டங்கள், பீடி உள்ளிட்டவை கொண்டு வந்து கொடுத்து வந்த நிலையில், அதனால் சில விபரீதங்கள் ஏற்பட்டதன் காரணமாக மத்திய சிறைகளில் சிறைத்துறை சார்பில் சிறிய அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டு பீடி உள்ளிட்டவை கைதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பாளை மத்தியச்சிறையில் சுமார் 1,100 கைதிகள் விசாரணைக்காகவும், தண்டனை பெற்றும் அடைக்கப்பட்டுள்ளனர். அங்கு சிறை கைதிகளில் புகைக்கும் பழக்கம் உள்ளவர்களுக்காக பீடி வழங்கப்பட்டு வந்த நிலையில், சமீபத்தில் 10 எண்ணம் கொண்ட பீடி கட்டு ஒரு கைதிக்கு ஒரு வாரத்திற்கு 2 கட்டு மட்டுமே வழங்க வேண்டும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2 கட்டுகள் மட்டும் ஒரு வாரத்திற்கு வழங்கப்படும் என்று சிறை வார்டன்கள் அங்கிருக்கும் கைதிகளிடம் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் திடீரென்று பீடிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதால் வாரத்திற்கு 2 பீடி கட்டுகள் தான் கொடுப்பீர்களா என்று கேட்டு மனம் உடைந்து போன 2 விசாரணை கைதிகள் நேற்று பாளை மத்திய சிறையில் தங்களது அறையில் இரும்பு துண்டு மூலம் கைகளை அறுத்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றனர்.

இதுகுறித்து அறிந்த சிறை வார்டன் உடனடியாக அந்த 2 கைதிகளையும் மத்திய சிறையின் உள்ளே உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

தொடர்ந்து அவர்களுக்கு அங்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கையை அறுத்துக்கொண்ட கைதிகள் பாளை கிருஷ்ணாபுரத்தை சேர்ந்த முத்தையா, கோவில்பட்டி கிழக்கு பகுதியை சேர்ந்த விக்னேஷ் என்பதும், இவர்கள் 2 பேரும் தூத்துக்குடி, குமரியில் கடந்த 2022ம் ஆண்டு வெவ்வேறு வழக்குகளில் கைதாகி கடந்த ஜூலை மாதம் முதல் பாளை மத்திய சிறையில் விசாரணை கைதிகளாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் சங்கு வளையல்கள் கண்டெடுப்பு



விருதுநகர், நவ.15

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 14 குழிகள் தோண்டப்பட்டு உள்ளன.

இதில் ஏராளமான ஆட்டக்காய்கள், சுடுமண்ணால் செய்யப்பட்ட முத்திரைகள், தங்க ஆபரணங்கள், செப்பு காசுகள், செவ்வந்தி கல், வேட்டைக்கு பயன்படுத்தப்பட்ட ஈட்டி முனை, சுடுமண்ணால் ஆன உருவ பொம்மைகள் உள்பட ஏராளமான பொருட்கள் கிடைத்து உள்ளன.

இந்த நிலையில் கூடுதலாக இரும்பால் செய்யப்பட்ட பொருள், சங்கு வளையல்கள், சுடுமண்ணால் செய்யப்பட்ட விளையாட்டு பொருள் ஆகியவை தற்போது கண்டெடுக்கப்பட்டு உள்ளன. இது குறித்து அகழாய்வு இயக்குனர் கூறுகையில், 3ம் கட்ட அகழாய்வில் இதுவரை 2,500க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்து உள்ளன. கூடுதலாக அகழாய்வு குழிகள் தோண்டும்பட்சத்தில் இன்னும் ஏராளமான பொருட்கள் கிடைக்க வாய்ப்புள்ளது என்று கூறினார்.

# கிளாடியேட்டர் 2 படத்தின் தமிழ் ரிலீஸ் உரிமையை பெற்ற பிரபல நிறுவனம்



ரிட்லி ஸ்காட் இயக்கத்தில் ரசல் குரோவ் நடிப்பில் கடந்த 2000ம் ஆண்டு வெளியான திரைப்படம் 'கிளாடியேட்டர்'. இப்படம் உலகமெங்கும் உள்ள திரையரங்குகளில் வெளியாகி சுமார் 400 மில்லியன் டாலர்கள் வசூலித்து சாதனைபடைத்தது. மேலும், இது ஐந்து ஆஸ்கர் விருதுகளையும் வென்றது.

கிட்டத்தட்ட 24 ஆண்டுகளுக்குப் பிறகு 'கிளாடியேட்டர் 2' படத்தினை ரிட்லி ஸ்காட் தற்போது உருவாக்கியுள்ளார். இப்படத்தில், பால் மெஸ்கல், டென்சல் வாஷிங்டன், பெட்ரோ பாஸ்கல் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்தப்படத்தின் 2 டிரெய்லர்கள் வெளியாகி வைரலாகின.

இந்தியாவில் ஆங்கிலம், இந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் இப்படம் வெளியாக உள்ளநிலையில், படக்குழு இந்தியாவில் புரமோசன் பணியில் ஈடுபட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படத்தின் இயக்குனர் ரிட்லி ஸ்காட் மற்றும் நடிகர் பால் மெஸ்கல் ஆகியோர் இந்தியாவுக்கு வருகை தர உள்ளதாக கூறப்படுகிறது. இதனையடுத்து தற்போது இப்படத்தின் தமிழ் ரிலீஸ் உரிமையை பிரபல நிறுவனமான ரோமியோ பிக்சர்ஸ் பெற்றுள்ளது. இப்படம் நாளை திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிறுவனம் ஏற்கனவே "சார், தி கோட், இந்தியன் 2" ஆகிய படங்களின் ரிலீஸ் உரிமையை பெற்று திரையரங்குகளில் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

# உலக நீரிழிவு தினம்: ரசிகர்களுக்கு ஏ.ஆர்.ரகுமான் வேண்டுகோள்



ஏ.ஆர்.ரகுமான் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறியிருப்பதாவது ;

நண்பர்களே நான் முக்கியமான ஒன்றைப் பற்றி பேச விரும்புகிறேன் நீரிழிவு மற்றும் உங்கள் கண்கள்.

நீங்கள் நீரிழிவு நோயுடன் வாழ்கிறீர்கள் என்றால், இது இரத்த சர்க்கரையை நிர்வகிப்பது மட்டுமல்ல. நீரிழிவு நோயானது நீரிழிவு ரெட்டினோபதிக்கு வழிவகுக்கும், இது கடுமையான பார்வைப் பிரச்சினைகளை ஏற்படுத்தும், குருட்டுத்தன்மையையும் கூட ஏற்படுத்தும்.

ஆனால் இதோ ஒரு நல்ல செய்தி, வழக்கமான கண் பரிசோதனைகள் மூலம், நீரிழிவு ரெட்டினோபதியை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து உங்கள் பார்வையைப் பாதுகாக்க உதவலாம். இன்று நவம்பர் 14ஆம் தேதி உலக நீரிழிவு தினம் என்பதால் கண் பரிசோதனைக்கு நேரம் ஒதுக்குமாறு உங்களை ஊக்குவிக்கிறேன்.

உங்களுக்கு நீரிழிவு நோய் இருந்தால், அல்லது யாரையாவது அறிந்திருந்தால், உங்கள் பார்வையைப் பாதுகாக்க நடவடிக்கையை எடுக்கவும், ஒரு எளிய, வருடாந்திர கண் பரிசோதனை அனைத்து வித்தியாசத்தையும் ஏற்படுத்தும். இந்தச் செய்தியைப் பரப்பி, ஒளிமயமான எதிர்காலத்தைக் காண அனைவருக்கும் உதவுவோம், நன்றி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அமரன் கெட்டப்பில் மனைவிக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த சிவகார்த்திகேயன்



ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து தீபாவளி பண்டிகையில் வெளியானபடம் 'அமரன்'. ராஜ்கமல் பிலிம்ஸ் இப்படத்தை தயாரித்துள்ள நிலையில் ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார்.

மறைந்த ராணுவ வீரர் மேஜர் முகுந்தின் வாழ்க்கையைத் தழுவி உருவாகிய 'அமரன்' படம் கடந்த தீபாவளியன்று வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இதில், சிவகார்த்திகேயன் மேஜர் முகுந்தாகவும், முகுந்தின் மனைவி இந்துவாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர். உலகளவில் சுமார் 900க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியான இப்படம் முதல் நாளில் ரூ.42.3 கோடியை வசூலித்தது.

இந்தநிலையில் அமரன் படம் கெட்டப்பில் ராணுவ உடையில் மனைவி ஆர்த்திக்கு நடிகர் சிவகார்த்திகேயன் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பான வீடியோவை தனது இன்ஸ்டாகிரம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இந்த வீடியோவுக்கு ரசிகர்கள் பலரும் லைக் செய்தும், டிரெண்ட்ங் செய்தும் வருகின்றனர்.

# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 3வது டி20 போட்டி; இந்திய அணி அபார வெற்றி




சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியாவும், 2வது போட்டியில் தென் ஆப்பிரிக்காவும் வெற்றி பெற்றுள்ளன. இதனால் தொடர் 11 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள்ளது.

இந்த நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையலான 3வது டி20 போட்டி செஞ்சூரியன் மைதானத்தில் இன்று நடைபெற்றது. இந்த போட்டியில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி இந்தியா முதலில் பேட்டிங் செய்தது. தொடக்க வீரராக களமிறங்கிய சஞ்சு சாம்சன் தான் சந்தித்த 2வது பந்திலேயே டக் அவுட்டாகி வெளியேறினார்.

மற்றொரு தொடக்க வீரரான அபிஷேக் சர்மாவுடன், திலக் வர்மா ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியாக ஆடி ரன்குவிப்பில் ஈடுபட்டனர். 2வது விக்கெட்டுக்கு 107 ரன்கள் சேர்த்த நிலையில் அபிஷேக் சர்மா அரை சதமடித்து ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய கேப்டன் சூர்யகுமார் யாதவ் ஒரு ரன்னிலும், பாண்ட்யா 18 ரன்களிலும், ரிங்கு சிங் 8 ரன்களிலும் வெளியேறினர்.

அதிரடியைத் தொடர்ந்த திலக் வர்மா சதமடித்து அசத்தினார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 219 ரன்கள் குவித்தது. திலக் வர்மா 107 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து 220 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்கா அணி பேட்டிங் செய்தது. முதலில் களமிறங்கிய வீரர்கள் இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சொப்ப ரன்களின் தங்களது விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். இதையடுத்து களமிறங்கிய டேவிட் மில்லர் மற்றும் ஹென்ரிச் கிளாசென் நிதனமாக விளையாடினர். ஆனால் அந்த பார்ட்னர்ஷிப்பும் நீண்ட நேரம் நீடிக்கவில்லை.. மில்லர் 18 ரன்களும், கிளாசென் 41 ரன்களும் எடுத்து அவுட்டாகினர்.

இறுதி கட்டத்தில் மார்கோ ஜான்சன் அதிரடியாக விளையாட தென் ஆப்பிரிக்க அணி கவுரமான நிலையை எட்டியது. 20 ஓவர்கள் முடிவில் தென் ஆப்பிரிக்க அணி 208 ரன்கள் மட்டுமே எடுத்து 7 விக்கெட்டுகளை இழந்தது. இதன் மூலம் 11 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது. தென் ஆப்பிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக மார்கோ ஜான்சன் 54 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அர்ஷ்தீப்சிங் 3 விக்கெட்டும், வருண் சக்கரவர்த்தி 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதன்மூலம் 4 ஆட்டங்கள் கொண்ட போட்டியில் இந்தியா 2 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

# புரோ கபடி லீக்: பாட்னா பைரேட்ஸ் அணியை வீழ்த்தி அரியானா ஸ்டீலர்ஸ் வெற்றி




11வது புரோ கபடி லீக் தொடர் கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் ஐதராபாத்தில் நடந்து முடிந்தன. இதையடுத்து தொடரின் 2வது கட்ட லீக் ஆட்டங்கள் நொய்டாவில் நடைபெற்று வருகின்றன.

இந்த தொடரில் இன்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் குஜராத் ஜெயண்ட்ஸ் பெங்கால் வாரியர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 4728 என்ற புள்ளிக்கணக்கில் பெங்கால் வாரியர்சை வீழ்த்தி குஜராத் ஜெயண்ட்ஸ் அணி வெற்றி பெற்றது

தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பாட்னா பைரேட்ஸ் அரியானா ஸ்டீலர்ஸ் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அரியானா ஸ்டீலர்ஸ் அணி 3732 என்ற புள்ளி கணக்கில் பாட்னா பைரேட்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

# ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்; ரூப்லெவை வீழ்த்தி வெற்றி பெற்ற கார்லஸ் அல்காரஸ்



உலகின் டாப்8 முன்னணி வீரர்கள் (ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு) மட்டும் பங்கேற்கும் ஏ.டி.பி. இறுதி சுற்று எனப்படும் ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி இத்தாலியில் உள்ள துரின் நகரில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காராஸ், ரஷியாவின் ஆண்ட்ரே ரூப்லெவ் உடன் மோதினார். தொடக்கம் முதலே பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 63, 76 (108) என்ற செட் கணக்கில் ஆண்ட்ரே ரூப்லெவை வீழ்த்தி கார்லஸ் அல்காரஸ் வெற்றி பெற்றார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.